முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வால்மீகி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.06.2019, செவ்வாய்க்கிழமை

1. **அருட்குருவாக அறம் வளர்த்து**
**அகிலம் காக்க அவதாரம் புரிந்த**
**அருட்சுடரே ஞான வள்ளலே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
குறையிலா **விகாரி விடை திங்கள்**
**தெரியவே எழுநான்கு திகதி குசன் வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 28ம் நாள் 11.06.2019, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனுக்கு வால்மீகி யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வாக அரங்கன் சீடர்கள்
ஞான சேவையாக உலகமெங்கும்
நல்சேவை ஆற்றி வருக
4. வருகவே உலகோர் பின்பற்றிவர
வையகம் தரும பலம் பெருகி
பெருமை மிக்க அரங்கன் தலைமை
பேருலகே ஏற்றுத் தொடர
5. தொடரவே ஞானிகள் ஆளுமை
தேசிகன் வழி தேசமெங்கும்
தடையற நிலைகள் உயரும்
தருமசக்தி மிக்க நல்லுலகமாகும்
6. ஆகவே ஞானதேசிகனாக
ஆறுமுகன் அற்புதம் நிகழ்த்த
யுகமக்களே பிரணவ சித்திமிகு
ஓங்காரக் குடிலை அணுகிவந்து
7. வந்துமே சரவண சோதி சுடரை
வணங்கி சீடர் பெருமக்களாகி
சிந்தை வைத்து தருமமதில்
சிறப்பான உதவிகளும் செய்து
8. செய்துமே ஆசான் படைக்கும்
செப்பிடுவேன் அருளமுது உண்டு
அய்யன் முருகனை போற்றி
அனைத்து முழுமதி பூசை காலம்
9. காலமதும் கலந்து வருக
கலந்து இணைந்து வருபவர்க்கு
காலனை வென்று சிறக்கும்
கலியுகத்தில் மரணம் வெல்லும்

10. வெல்லும் பலமும் சூட்சுமமும்
வினை போக்கி வாழும் காலமே
இல்லாமை வறுமை துன்பமிலா
எல்லா வளமும் பலமும் பெற்று

11. பெற்றுமே உலகோர் சிறப்பர்
பிரணவ சித்தி முக்தி நிலையை
உற்றதொரு குருவரங்கன் வழி வர அடைவர்
உரைத்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் வால்மீகி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அருளே வடிவமாக வந்துதித்து அருட்குருவாய் விளங்கி அறத்தினை வளர்த்து உலகை காக்கவே அவதாரமாக வந்துதித்திட்ட அருட்பெருஞ் சுடரே ஞானவள்ளலே உலகினில் அற்புதமான உமது பெருமைகளை கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் **28**ம் நாள் **11.06.2019**, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே வால்மீகி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வால்மீகி.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருட்சீடர்கள் உலகமெங்கும் பரவி ஞான சேவையாக அரங்கரின் புகழை, தருமத்தினை, கொள்கைகளை பரப்பி வருகின்றார்கள். உயர் ஞானநெறிகளை உலக மக்களெல்லாம் ஏற்று பின்பற்றி நடந்திட, இந்த உலகமே தருமபலம் பெருகி பெருமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையை இந்த உலகமே முழுமனதாய் ஏற்றுக் கொண்டு தொடர்ந்திட உலகினில் ஞானிகளின் ஆட்சி அரங்கமகா தேசிகனார் மூலமாக நாடுகள்தோறும் பரவி விரிவடையும். ஞானிகள் ஆட்சியினால் தேசங்கள் எல்லாம் தடையின்றி நிலைகள் உயர்ந்திடும். உலகமே தருமசக்தி மிக்க நல்லுலகமாக ஆகிடும்.

ஆதலினால் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வடிவினிலே முருகப்பெருமானும் அற்புதங்களை நிகழ்த்தி வருகின்றார். உலக மக்களே ஓங்கார சக்தி மிகக் கொண்ட துறையூர் ஓங்காரக்குடிலினை அவரவரும் பயபக்தியுடன் பணிந்து அணுகி ஆங்கே உலக நலன் கருதி ஏற்பட்டுள்ள சரவணஜோதி சுடரை முருகப்பெருமான் நேரில் வெளிப்படுகின்ற சுடராகிய சரவணஜோதி சுடரை வணங்கி அரங்கன் திருவடி பணிந்து அரங்கருக்கு யாம் சீடர்களானோம் என்றே அரங்கரின் சீடர்களாக சிந்தையில் எண்ணி அரங்கமகா தேசிகனாரின் தானதருமப் பணிகளிலே தாராளமாய் பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் வருவதுடன் ஞானிகளை பூஜித்து அரங்கர் வழங்கும் அருளமுதாகிய உணவினை உண்டு வர வேண்டும்.

உலக நலன் கருதி அய்யன் அரங்கப்பெருமான் முருகப்பெருமானை போற்றி மாதந்தோறும் பௌர்ணமி தினத்தினிலே நடத்துகின்ற ஞானிகள் சிறப்பு வழிபாடுகளிலே கலந்து கொண்டு ஞானிகளின் அருளாசிகளை பெறுகின்ற மக்களுக்கு காலனாகிய எமனையும் வெல்லுகின்ற மரணமிலாப் பெருவாழ்வு அடையும் பலமும் சூட்சுமமும் விளங்கி அவரவரின் வினைகளைப் போக்கி வாழும் காலமே வறுமை துன்பம் இல்லாமல் துன்பங்கள் ஏதும் இல்லாத வகையிலே எல்லா வளமும் நலமும் பெற்று சர்வபலமும் பெற்று உலக மக்கள் சிறப்படைவார்கள். ஓங்கார சக்தியையும் முக்தியையும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மூலம் பெற்று சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் வால்மீகி முனிவர்.

–சுபம்–